30th September 1958]

SRI S. LAZAR : குழந்தைகளின் உணவுப் பொருள்கள் போதிய அளவு கிடைக்கவில்லை என்பது சர்க்காரின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அப்படியானால், அவை போதிய அளவு கிடைக்கச் செய்வதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

THE HON. SRI .M. BHAKTAVATSALAM : குழந்தைகளின் உணவுப் பொருள்கள் அந்நிய நாடுகளிலிருந்து வரவழைக்கப்படுகின்றன. அவை போதிய அளவு கிடைக்கவில்லை என்று சொல்வது சரியல்ல. அவை போதிய அளவில் கிடைக்கவில்லை என்ற தகவல் சர்க்காருக்கு இதுவரையில் வரவில்லை.

SRI A. A. RASHEED : Is it a fact that the Government of India have liberalized the import of baby foods for the next period ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have no information about it.

SRI S. RAMAKRISHNA THEVAR : வெளிநாடுகளிலிருந்து போதிய அளவு இறக்குமதியாகாததால்தான், உணவுப் பொருள்களின் விலை ஏறிக்கொண்டு போகிறது என்று சொல்லப்படுகிறது. குழந்தைகளின் உணவுப் பொருள்களை இந்த நாட்டிலேயே ஏன் தயாரிக்கக்கூடாது ? இங்கே உற்பத்தியாகும் அரிசி, கேப்பை முதலிய தானியங்களைக் கொண்டு குழந்தைகள் உணவை தயாரிக்கக்கூடாதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மூலக் கேள்வியிலும் இது சம்பந்தமாகக் கேட்கப்பட்டிருக்கிறது. அதற்கு நான் முன்பே விடையளித்தேன். குழந்தைகள் உணவைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை உதகமண்டலத்தில் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

Home for young orphan girls

* 639 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) at what places Homes are run for the protection of young orphan girls by the Government and private agencies in the Madras State ;

(*b*) the number of orphan girls in each Home;

(*c*) how many of them have been married off; and

(*d*) the amount provided by the Government towards grants for these Homes in 1958–59?

THE HON. SRI C. SUBRAMANIAM : A statement[a] is placed on the table of the House.

SRI P. G. MANICKAM : மேற்கண்ட விடுதிகளில் 1,214 அனாதை இளம் பெண்கள் இருப்பதாக தெரிகிறது. ஆனால் அதில் 37 பேர் களுக்குத்தான் திருமணம் ஆகியிருப்பதாக குறிப்பில் காணப்படுகிறது. ஆகவே, இந்த விடுதிகளில் இருக்கும் பெண்களை திருமணம் செய்து கொள்ள முன்வருகிறவர்களுக்கு சர்க்கார், ஊக்கம் அளிக்கும் முறையில், சர்க்கார் காரியாலயங்களிலும் முக்கியமான தொழிற்சாலை களிலும் உத்தியோகம் கொடுப்பதுபற்றி பரிசீலிக்குமா ?

மொ.

[a] Printed as Appendix III on pages 1126–1127 infra.

[30th September 1958

THE HON. SRI C. SUBRAMANIAM : திருமணத்தில் கட்டாய திருமணம் செய்ய முடியாது. "இன்ட்யூஸ்மென்ட்" கொடுத்தும் திருமணம செய்ய முடியாது. திருமணம் செய்துகொள்வது அவரவர்கள் மனதைப் பொறுத்தது.

SRI S. M. ANNAMALAI : இந்த பெண்களை திருமணம் செய்து கொடுப்பது, ஒரே ஜாதியில்தான் செய்து கொடுக்கிறார்களா ? அவர்கள் திருமணம் செய்து பிற்பாடு சரியான முறையில் வாழ்க்கை நடத்தி வருகிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கல்யாணம் ஆன பிற்பாடு கணவனும் மனைவியும் வாழ்க்கை நடத்துவது அவர்களது பொறுப்பு. சர்க்கார் இதில் ஒன்றும் செய்யமுடியாது.

SRI K. ANBAZHAGAN : 30 வயதிற்கு மேல் பிரம்மச்சாரிகளாக இருப்பவர்கள் இந்த அனாதை விடுதிகளில் உள்ள பெண்களைத்தான் மணந்துகொள்ளவேண்டுமென்று அரசாங்கம் ஏதாவது சட்டம் போட முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சட்டங்கள் போடலாம். ஆனால் கல்யாணம் செய்த பிறகு கல்யாண வாழ்க்கையை இப்படித்தான் நடத்தவேண்டுமென்று சட்டம் போடமுடியுமா ?

Occupational therapy

* 640 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether 'Occupational Therapy' is practised in our State ; and

(*b*) if so, the nature of treatment given and the hospitals where 'Occupational Therapy' is practised?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, in two institutions.

(*b*) A statement* is placed on the table of the House.

Marudaiyar bridge

* 641 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the scheme for the reconstruction of Marudaiyar bridge near the scene of Ariyalur Railway disaster is ready;

(*b*) the cost of the scheme;

(*c*) when the same will be commenced and completed; and

(*d*) the special engineering devices proposed to be employed therein to withstand heavy and sudden floods like the one that occurred in 1956?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) Rs. 6,00,000.

(*c*) The work was commenced in April 1958 and is expected to be completed in April 1960.

* Printed as Appendix IV on pages 1127–1128 infra.